# பதவி நிலை உதவியாளர் வகுப்பு - I பதவி

**தேசிய சேமிப்பு வங்கி, பதவிநிலை உதவியாளர் வகுப்பு - I பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்**

**தகைமைத் தேவைப்பாடுகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
2. கல்வித் தகைமைகள்
   சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக 05 திறமைச் சித்திகளுடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் (பொது ஆங்கிலம், பொது அறிவு மற்றும் பொதுத் தகவல் தொழில்நுட்பம் நீங்கலாக) சித்தியடைந்திருத்தல்

கணனிப் பிரயோகத்தில் அறிவினைப் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

3. வயதெல்லை
   28 வருடங்களுக்கு கீழ்

**தெரிவுசெய்யும் முறை**

**எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்**

செய்தித் தாள்களிலும் தேசிய சேமிப்பு வங்கியின் இணையத்தளத்திலும் வெளியிடப்பட்ட பதவி வெற்றிட விளம்பரத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் இருந்து, மேற்குறித்த தகைமைகளை பூர்த்திசெய்கின்ற தெரிவட்டவணைப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் பின்வரும் வினாத்தாள்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சைக்கும் அதனைத்தொடர்ந்து வருகின்ற நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றுமாறு வேண்டப்படுவர்.

**வினாத்தாள் I – எண் திறன்கள் மற்றும் நுண்ணறிவு (2 மணித்தியாலங்கள்)**

**வினாத்தாள் II – பொது அறிவு (1 மணித்தியாலம்)**

எழுத்துப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**நியதிகளும் நிபந்தனைகளும்**

- வெற்றி பெறுகின்ற அபேட்சகர்கள் இரண்டு வருட பயிற்சிக் காலத்திற்கு பணிக்கமர்த்தப்படுவதுடன் பயிற்சிக் காலத்தின் போது மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். (1ஆம் வருடம் ரூபா 45,000.00 மற்றும் 2ஆம் வருடம் ரூபா 60,000.00)
- 2 வருடப் பயிற்சியின் இறுதியில் அவர்கள் தற்போதுள்ள வங்கியின் ஒழுங்கு விதிகளுக்கமைவாக நிரந்தரப் பதவியணியினுள் ஈர்க்கப்படுவர்.
- ஆட்சேர்ப்புக்கான தெரிவுகள் மாவட்ட அடிப்படையில் அமைந்திருக்கும். தெரிவு செய்யப்படுபவர்கள் வங்கியின் தேவைப்பாடுகளுக்கமைவாக நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருக்க வேண்டும் என்பதுடன் வழமையான வங்கிச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக விற்பனை நிலைய சேகரிப்பு, படுகடன் அறவீடுகள், சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் வங்கியின் முகாமைத்துவத்தினால் குறித்தொதுக்கப்படும் ஏதேனும் வேறு கடமைகளுக்கு பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டும்.
- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு தொடக்கத்தில் நியமிக்கப்படும் நிலையத்தில் சேவையாற்ற வேண்டும். ஒரே நிலையத்தில் ஐந்து வருடங்கள் சேவையாற்றியுள்ளவர்கள் நாட்டின் ஏதேனும் பாகத்திலுள்ள வேறொரு நிலையத்திற்கு இடமாற்றப்படுவர்.
- தெரிவுசெய்யப்படுபவர்கள் தேவையான போதும் தேவையானவாறும் வழமையான பணியாற்றும் நேரத்திற்குப் பின்னரும் வார இறுதி நாட்களிலும் அல்லது விடுமுறைநாட்களிலும் பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுவர்.

**விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல்**

**www.nsb.lk** என்ற தேசிய சேமிப்பு வங்கியின் இணையத்தளத்தில் கிடைக்கப்படுகின்ற எமது நியம விண்ணப்பப்படிவத்தை விண்ணப்பதாரிகள் பயன்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பங்கள் **20.08.2021**ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விரைவுத் தபால் மூலம் அல்லது பதிவுத் தபால் மூலம் கீழ்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகத்தினால் வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டினை எதிர்காலத் தொடர்புகளுக்காக விண்ணப்பதாரிகள் வைத்திருக்க வேண்டும்.

தொடர்புடைய சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். தொடர்புடைய சான்றிதழ்களை இணைக்கத்தவறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படமாட்டார்கள்.

விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.

**மேற்குறித்த நடைமுறை தவிர்ந்த வேறு ஏதேனும் முறையூடாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது**

**மேலே வேண்டப்பட்ட தகைமைப் பிரமாணத்தினை நிறைவுசெய்யாத அல்லது பிழையான தகவல்களை சமர்ப்பிக்கின்ற ஏதேனும் விண்ணப்பம், மேலதிக அறிவித்தலின்றி ஆட்சேர்ப்பின் ஏதேனும் கட்டத்தில் நிராகரிக்கப்படும்.**

**ஏதேனும் வழியில் செல்வாக்கினை நாடுவது அல்லது பிழையான தகவல்களை சமர்ப்பிப்பது உடனடியாக தகைமையிழப்பதற்கு வழிவகுக்கும்.**

**தெரிவட்டவணைப்படுத்தப்பட்ட அபேட்சகர்களை மாத்திரம் அழைப்பதற்கும் ஆட்சேர்ப்பினை காலந்தாழ்த்துவதற்கும் அல்லது இரத்துச் செய்வதற்குமான உரிமையை வங்கி கொண்டுள்ளது.**

**பிரதிப் பொது முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி)**
**மனித வள அபிவிருத்திப் பிரிவு**
**தேசிய சேமிப்பு வங்கி**
**தலைமையகம், கொழும்பு 3.**

**அழைப்பு நிலையம் - 0112 379 379**
**இணையத்தளம் - www.nsb.lk**

உங்கள் பணத்திற்கு பாதுகாப்பான ஒரே இடம் தேசிய சேமிப்பு வங்கி